RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1847

# வரலாற்றுப் புவியியல் ஆய்வுமுறை கோட்பாட்டை முன்வைத்து சுருளிமலை

**து. முருகன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641018, தமிழ்நாடு, இந்தியா.

# Surulimalai based on the Theory of Historiography

**D. Murugan [a, *]**

[a] Department of Tamil, Government Arts College (Autonomous), Coimbatore-641018, Tamil Nadu, India

* Corresponding Author: murugand1985@gmail.com

Received: 01-07-2022
Revised: 30-10-2022
Accepted: 07-11-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

The Western Ghats of India have been declared by UNESCO as one among the world's heritage site in 2012. It plays an important role in changing the seasonal conditions of India and it causes rainfall in India. Chaturagiri Mountain, the mountain where the eighteen Siddhar Perumans formed a community and lived, and the Surulimalai, are located in the Western Ghats. Surulimalai is located near the Kambam valley in Theni district. The water falls in Suruli waterfall never dries up throughout the year, in contains two division, first fifty feet down and then twenty feet down. Flow of water is neither slow nor fast but moderate. Kanagi temple is located about five to six miles away from Surulimalai. On the basis of field research, the history of the Surabi river, ashrams, Imayagiri Siddhar cave, Bhutanarayana Siddhar ashram, Suruli Velapar place, etc. are found in Surulimalai based on the following stories mentioned in Arikesari Nallurth Thalapurana, the story of Phulanandeeswarar temple located in Chinnamanur, and the story of the Pandya kings, etc. This review article explains about the position, the theory, and the difference between one cult and another cult.

**Keywords:** Historiography, Surulimalai, Theory, Eighteen Siddhar, Suruli Waterfall

## முன்னுரை

சுருளிமலையை திருமலை என்று அரிகேசரிநல்லூர்த் தலபுராணம் குறிப்பிடுகிறது. இதன் எல்லையானது சதுரகிரிக்கு மேற்கேயும் வராகமலைக்குத் தெற்கேயும் அமைந்துள்ளதாகவும், தெற்கே சுருளியென்கிற சுரபிமலை மேல் மேகங்கள் எழுந்து மழை பொழிந்து ஆறு, கால்வாய், ஏரி, ஓடை முதலிய இடங்களில் பெருக்கெடுத்தாக அரிகேசரிநல்லூர்த் தலபுராணம்,

"ஏய்ந்த மேகமும் மாரி யிரைக்குமால்" (Abdur Rahim, 1997)

"சோனை யோங்கு மழைசொரிந் தெங்கணும்" (Abdur Rahim, 1997)

"தோய வோதைச் சுரபிநல் லாற்றுநீர்" (Abdur Rahim, 1997) நாட்டுப்படலத்தில் அளநாட்டினைப் (தேனி) பற்றி

"களநாட்டுங் கறையிறைவர் கமலமலர்த் தாளிணையை
யுளநாட்டு முனிவர்புத்தே ளுயர்வெல்லா மெடுத்துரைக்கும்
வளநாட்டுப் பதிகளினு மாண்புமிகு மேற்றிசையி

னளநாட்டின் னரிகைநகர்ச் சிறப்பதனை யறையலுற்றேன்" (Abdur Rahim, 1997)

சிறப்பைக் குறிப்பிடுகிறது. சுருளிமலையானது, திருமலை - சுரபிமலை - சுருளிமலை என திரிந்து வந்திருக்க வேண்டும். சுரபிமலையானது சுருளிமலை என்று மருவி வந்திருக்கலாம் என்று பேராசிரியர் சி. கோவிந்தராசனார் குறிப்பிடுகிறார். பேராசிரியர் கண்ணகியார் அடிசுவட்டில் புகார் முதல் வஞ்சி வரை எனும் நூலின் வாயிலாக குறிப்பிடும் சான்றுகள் மதுரையில் கோவலனை இழந்த கண்ணகி, சேரநாடு நோக்கிச் சென்ற வழியில் இளங்கோவடிகள் தந்த குறிப்புகளின் உதவியுடன் நடக்கத் தொடங்கினார். வைகை ஆறானது சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள பாதை வழியாகவே தடம் மாறாமல், பயணித்து சுருளிமலைத் தொடரை அடைந்து ஆராய்ந்த போது சுருளிமலைதான் “நெடுவேள்குன்றம்” என்பதை உறுதி செய்தார். “சித்தன் இருப்பு” என்ற பெயருடன் விளங்கிய மலை ஆவினன் குடியாகி, பின்னர் பொதினிமலையாக மளாறி தொடர்ந்து அதுவும் பழநிமலை என்று ஆனது போலவே, நெடுவேள்குன்றம் என்னும் பெயர் மலையில் (சுரபிமலை) இருந்து சுருண்டு விழும் அருவியின் பெயரால் சுருளிமலையாக மாறியிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

## கற்பகத்தருவும் காமதேனுவும் வீரபத்திரனால் தண்டிக்கப்படுதல்

சிவபெருமானை நிந்தித்துத் தக்கன் செய்த யாகத்தில் பங்கேற்ற அனைத்து வானவர்களும் தண்டிக்கப் பெற்றனர். அவ்வாறே, காமதேனுவும் கற்பகத்கருவும் வீரபத்திரனால் தண்டிக்கப் பெற்றதையடுத்து காமதேனுவை நாட்டுப்பசுவாகவும், கற்பகத்தருவை முட்பூலாவாகவும் சபித்தார். அவரிடம் சாபவிமோச்சனம் அவையிரண்டும் கேட்க,

“தேனு வைக்குறித் துலகத்துப் பசுவெனத் திகழ்துன்

ஊனை யோர்புலி யுண்கவென் னுரைத்திடத் தேனு

ஞான நாயக வித்துயர் கழிவுற நயபாய்

ஈன வெண்பிழை பொறுத்தரு ளுதியென வியம்ப” (Abdur Rahim, 1997)

என்று, முட்பூலா மரமாய் முளைத்த இடத்தில் கற்பகத்தருவிற்கு ஆயனாலும் நாட்டுப்பசுவாய் பிறந்து ஒரு புலியினால் உனக்கும், புலிக்கும் சாபம் நீங்கும் என்று அரிகேசரிநல்லூர்த் தல புராணம் குறிப்பிடுகிறது.

## பசுவுக்கும் புலிக்கும் சாபம் நீங்குதல்

சுருளிமலைக்கு வடமேற்கில் சிவபெருமான் வீற்றிருக்கும் தெய்வநாயகபுரம்(கம்பம்) என்னும் ஊரில் அந்தணன் வீட்டில் உள்ள பசுக்கூட்டத்தில் காமதேனு நாட்டுப்பசுவாக பிறந்து சுருளிமலையாகிய திருமலையில் மேய்ந்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அந்தணரால் சாபத்தால் வந்த கந்தர்வனாகிய புலியானது பசுவின் மேல் பாயந்த போது பசுவானது சிவ சிவ என்று சத்தமிட அது கேட்ட புலி தன் பூர்வீகம் அறிந்து சாபம் நீங்கியதாக

“உன்னு போதினி லுமையொரு பாகன்வெள் விடைமேல்

மன்னி வந்தெழில் வருசுர பிக்குமப் புலிக்கு

மின்னும் வானிடை மேவிடைக் கண்டலவ் விருவர்

முன்னை நல்லூருப் பெற்றனர் மொழிந்தனர் போற்றி” (Abdur Rahim, 1997)

குறிப்பிடுகிறது. இத்திருமலையானது இது முதல் ‘சுரபிமலை’ என்று பெயர் பெற்றதாகவும், இந்தமலையிலிருந்து தோன்றிய ஆற்றில் மூழ்கினால் பாவங்கள் நீங்குமாறும், இவ்விடத்தில் விழும் இலை, வேர், குச்சி, எலும்பு முதலியன கல்லாயும் பாசமில்லாமலும் இருக்க இறைவனிடம் பசுவானது வேண்டிக் கொண்டது. இதனை

“வேற்று நல்வரங் கேண்மி னென்றிட விழைசுரபி

வீற்றி ருந்தவிம் மலையினுக் கென்பெயர் விளங்க.” (Abdur Rahim, 1997)

என்று திருமலையானது சுரபிமலையாக மாற்றமடைந்ததை அரிகேசரிநல்லூர்த் தலபுராணம் குறிப்பிடுகிறது.

“அப்பசு மலையின்வாயி லங்குரித் தன்வெரின் மேல்

ஒப்புற வார்ந்தங் கோடி யுயர்மடு மலையின் வீழும்

ஆப்புனல் வீழ்ச்சிமுன்னின் றாடுவோர் பாவந் தீர்த்தங்

கெப்பயன் விரும்பி னாலும் மீத்தருள்செய்யும் நாளும்” (Abdur Rahim, 1997)

எனும் பாடல் வரிகளின் மூலம் சுரபி நதியின் சிறப்பை அறிய முடிகிறது.

## இலக்கியங்களில் சுருளிமலை

சுருளிமலையின் எல்லையானது வட்டப்பாறையிலிருந்து தொடங்கி, கானாறுக்கு மேல்புறமாக உதகச்சுனை இருக்கிறது. அந்த உதகச்சுனைக்குப் பக்கத்திலிருக்கிற மூங்கில் வனத்தில் இருநாள் வேதி உதகச்சுனை இருக்கிறது. அதன் அருகிலுள்ள பன்னிப்பாறையினருகாமையிலுள்ள காளி கானலுக்குள் பூதநாராயணச் சித்தர் ஆசிரமம் இருப்பதாக கோரக்கர் மலைவாகடத்தில் 155வது பக்கத்திலும், போகர் மலைவாகடத்தில் 53 வது பக்கத்திலும் பதிப்பாசிரியர் ஆர்.சி. மோகன் குறிப்பிடுகிறார் (Mohan, 1994; Mohan, 1999).

பூதநாராயணச் சித்தரானவர் கைலாசப்புடவிற்கு காவலராக இருந்ததாகக் குறிப்புகள் காணப்படுகிறது. தற்போது பூதநாராயணச் சித்தர் ஆசிரமம் ஆனது, பெருமாள் கோயிலாக மாற்றம் பெற்றுள்ளது. இங்கு வரும் மக்கள் இறப்பிற்கு சடங்குச் செய்யும் பொருட்டு இத்தலத்திற்கு வருகின்றனர். அருவியில் குளித்து விட்டு பூதநாராயணப் பெருமாள் கோயிலில் விளக்கு ஏற்றிவைத்து வழிபடுகின்றனர்.

## கைலாயப்புடவு

ஆற்றின் வடபுறமுள்ள மலையிலிருந்து கீழ்ப்புறம் வரும் பாதை வழியாக இறங்கினால் மலையடிவாரத்தை அடையலாம். ஆந்த அடிவாரத்தில் மலை மேலிருந்து ஒரு ஆறு வருகிறது. அந்த ஆற்றோரம் மகா கைலாசப்புடவும், அதன் முன்னதாக பூதநாராயணச் சித்தர் ஆசிரமும் காணப்படுகிறது. இந்த கைலாயப்புடவுக்குக் காவலராக இந்த பூதநாராயணச் சித்தர் காணப்படுகிறார் என்றும், அந்த புடவுக்குள் அனேக சித்தர்களிருக்கக்கூடிய விசாலமான இடமிருக்கிறது என்று சொல்வதைக் கேட்ட நாகார்ச்சுன முனிவர்களிடம் கோரக்க முனிவர் கூறுகிறார்.

கைலாயத்தில் இமயகிரிச்சித்தர் என்று ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானைத் தினமும் பூசிக்கப் பெற்றவர். அவர் மீது சிவபெருமானுக்குப் பிரியமுண்டு. அப்படியிருக்கிற காலத்தில் துர்வாச முனிவர், கன்வர், போன்றோர் சதுரகிரி அடிவாரம் தபோவனமென்ற மாவூற்றில் யாகம் வளர்த்துத் தவம் செய்து சிவனின் அருளைப் பெற்றுத் தேவலோக வாழ்வைப் பெற்றனர். சிவனும் அங்கு மகாலிங்கமாய் எழுந்தருளினார். தேவலோக வாழ்வைப் பெற்ற முனிவர்கள் மகிழ்வுடன் கெவுனக்குளிகையிட்டு ஆகாயவெளியில் செல்கையில் சுருளிமலையில் பல அரிய முனிவர்களும், ரிஷிகளும் அருந்தவம் புரிவதையும் சப்த கன்னியர் சிவனுக்கு மலர் எடுத்துச் செல்வதையும் சிறப்பான அந்த வனத்தின் உதகத்திலிறங்கிய மனிதர்கள் கற்களாக மாறியுள்ளதையும் கண்டு அந்த இடத்தின் மேன்மையை அறிந்து சிலகாலம் அங்கு தங்கிப் பின் தேவலோகம் சென்றடைந்தனர். அப்போது ஒரு நாள் இவர்களைச் சந்தித்த இமயகிரிச்சித்தர் அவர்கள் எங்கிருந்து வருகின்றனர் என்பதை வினவி அதன் மூலம் அவர்களின் தவப்பலனையும் சுருளிமலையின் சிறப்பையும் அறிந்து உடன் தாமும்

அங்கிருக்க அவாவுடன் புறப்பட்டு வந்து ஆற்றோரம் குண்டுமலையில் வெளியில் தலை மட்டும் நுழையும் படியாக உள்ளே தவமியற்றுவதற்கு விசாலமாயும் புடவு செய்து கொண்டு குகைக்கு முன்னால் 'பூதநாராயணச் சித்தரை' காவலிருக்குமாறும் கேட்டுக் கொண்டார். புடவினுள் நுழையும் முன் இக்குகைக்குள் வர விரும்பும் தவயோகிகள் மட்டும் வரவியலும் எனவும் மற்றவர் தலை நுழையாது எனவும் கூறி புடவினுள் சென்று தவமியற்றி வந்தார். கைலாயத்தில் தம்மைத் தினமும் பூசிக்கும் இமயகிரிச்சித்தர் வராமையைக் கண்டு சிவன் ஞான திருஷ்டியால் சித்தர் சுருளிமலையில் இருப்பதை அறிந்து அவருக்கு நல்லாசியருள விழைந்து தம் துணைவியுடன் அங்கு வந்தார். அம்மையப்பர் வருகை அறிந்த ரிஷி, முனி, சித்தர்கள் அனைவரும் தங்கள் ஆசிரமத்தை விட்டு வந்து தரிசிக்கையில், சிவன் அவர்களது தவம் முடிந்தவுடன் தேவலோக வாழ்வளிப்பதாகக் கூறிவிட்டு மாய உருவில் இமயகிரிச்சித்தர் உள்ள குகையுள் நுழைந்தார். ஆதைக் கண்ட அனைவரும் சிவபெருமானே புடவினுள் நுழைந்தமையால் 'கைலாயப்புடவு' என்று அழைக்கலாயினர். புடவினுள் நுழைந்த சிவனைக் கண்ட சித்தர் மெய்நடுங்கி அடி பணிந்து வணங்கிட அவரை அழைத்து வெளியேறிய சிவன் உமையவளுடன் சேர்ந்து நின்று சித்தருக்கு வேண்டிய வரம் பற்றி வினவினார். அதற்கு சித்தர் சுருளிமலைப்புடவில் சில காலம் வசிக்க விரும்பும் தனக்குக் கைலாயத்தில் சிவனைப் பூசித்து வந்த வழக்கப்படியே அவ்விடத்திலும் பூசிக்கும் வரம் வேண்டும் எனக் கோரினார். ஆவர் வேண்டுகோளுக்கருளிய அம்மையப்பர், லிங்கமாகவும் அம்மையாகவும் அமர்ந்தனர். இமயகிரிச்சித்தரும் அன்புடன் வணங்கித் தவறாது பூசித்து வருகையில் சித்தர்கள் கூடித் திருப்பணி முடித்து குடமுழுக்கு செய்து சுவாமிக்கு 'சுருளியாண்டவர்' என்றும் அம்மைக்கு 'சுருளியம்மை' என்றும் பெயரிட்டு அழைத்தனர் என்று கோரக்கர் மலைவாகடத்தில் 158 வது பக்கத்திலும், சுவாமிக்கு 'சுருளியான்மர்' என்றும் அம்மைக்கு 'சுருளியம்மை' என்றும் பெயரிட்டு அழைத்தனா போகர் மலைவாகடத்தில் 55வது பக்கத்திலும் பதிப்பாசிரியர் ஆர்.சி. மோகன் பதிவுச்செய்துள்ளார் (Mohan, 1994; Mohan, 1999).

## சிலப்பதிகாரத்தில் சுருளிமலை

சுருளிமலைப் பற்றி சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் காணப்படுகிறது. இளங்கோவடிகள் சுருளிமலையை முருகன் குடிக்கொண்டிருக்கும் நெடுவேள்குன்றம் என்று பதிவு செய்துள்ளார். இம்மலையில் உள்ள மேகமலைப் பற்றியும் குறிப்புகள் காணப்படுகிறது. இதனை இளங்கோவடிகள் சுருளிமலை என்று,

"நெடுவேள் குன்றம் அடிவைத்தேறி

பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்

தீத் தொழிலாட்டியேன் யானென்றேங்கி"

மேற்கானும் அடிகளின் மூலம் குறிப்பிடுகிறார் (Rajaram, 2019). இம்மலையில் காணும் சுருளிவேலப்பர் ஆறுமுகங்களையும், பன்னிரு கைகளையும் உடையவன் என்றும் அவன் மயிலாகிய ஊர்தியில் சென்று, அவுணரின் ஆற்றல் அழியுமாறும் தேவேந்திரன் போற்றுமாறு பகைவர்களை அழித்தான் என்று இளங்கோவடிகள்,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்

ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே"

"அணிமுகங்கள் ஓர் ஆறும், ஈராறு கையும்,

இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றோ"

எனும் அடிகளின் மூலம் குறிப்பிடுகிறார் (Rajaram, 2019). இம்மலையினைப் பற்றிக் கூறும் ஆசிரியர் குரவைக்கூத்தாடும் மகளிரை இந்திரவில் போன்ற அழகினையும் தன்னுட் கொண்டதாக

இழும் என்ற ஒலியோடு வீழ்ந்து இங்கே காணப்படும் மலையருவிலே நீராட வருவதாக கூறுகிறார். இதனை,

“இந்திரவில்லின் எழில் கொண்டு, இழுமென்று

வந்தீங்கு இழியும் மழையருவி ஆடுதுமே”

என்றும், மேகங்கள் சூழ்கின்ற சோலை (மேகமலை) என்றும் கீழ்க்காணும் பாடலடியின் மூலம்

“அஞ்ச லோம்பு என்று நலனுண்டு நல்காதான்

மஞ்சு சூழ் சோலை மலையருவி ஆடுதுமே”

சுருளிமலையின் மீது வரும் அருவியினை மலையருவி என இளங்கோவடிகள் குறிப்பிட்டிருக்கலாம் (Rajaram, 2019)..

## வரலாற்றுப்புவியியல் ஆய்வுமுறை கோட்பாட்டின் அடிப்படையில் சுருளிமலை கோட்பாடு

கோட்பாடு என்பது ஆழ்ந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டதும், அறிவு சார்ந்ததுமான ஒரு பொதுமைப்படுத்தும் சிந்தனையை அல்லது அச்சிந்தனையின் பெறுபேறுகளைக் குறிக்கும். ஒவ்வொரு கொள்கையின் சிந்தனைத் தெளிவினாலும் - ஏற்றுக் கொள்ளல் என்பதாலும் - சமுதாய நிலைப்பாட்டினாலும் கோட்பாடுகள் உருவாகின்றன.

## நாட்டுப்புறவியல் கோட்பாடு

நாட்டுப்புற வழக்காறுகளைப் புரிந்து கொள்வதும் அவற்றைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், வெளியிடுவதிலும், ஆவணப்படுத்துவதிலும் மட்டும் அடங்கியிருப்பதில்லை (Manikannan, 2020). அதனையும் தாண்டி, பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையில் அவற்றைப் புரிந்துக்கொள்வதிலும் அர்த்தப்படுத்துவதில் தான் அடங்கியிருக்கிறது.

நாட்டுப்புறவியல் என்பதற்கு அகராதி தரும் கருத்து மக்களுடைய அல்லது நாட்டினுடைய அல்லது ஓர் இனத்தினுடைய கற்றல் மற்றும் அறிவு சிறப்பாகப் பழங்காலத்திலிருந்து வழிவழியாக வழங்கி வருவது என்பதாகும் (Geetha & Manogarane, 2022).

நாட்டுப்புறவியல் என்பதற்கு அறிஞர்கள் தரும் கருத்து அறிஞர்கள் ‘நாட்டுப்புறவியல்’ என்ற சொல்லுக்குப் பதில் ‘நாட்டார் வழக்காறு’ என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளனர். ஆய்வறிஞர் நா. வானமாமாலை அவர்களால் பயன்படுத்தப்பட்ட சொல் ‘நாட்டார் வழக்காறு’ என்பதாகும். இவர் வழியைப் பின்பற்றி அறிஞர் தே. லூர்து என்பாரும் நாட்டுப்புறவியல் என்பதற்கு ‘நாட்டார் வழக்காறு’ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். மேனாட்டு அறிஞர்கள் ‘Folklore’ என்ற சொல்லை ‘நாட்டுப்புறவியல்’ என்பதற்கு ஈடாகப் பயன்படுத்தியுள்ளனர்.

## நாட்டுப்புறவியல் ஆய்வுமுறைகள்

ஆய்வுமுறைகளில் பொதுவானவற்றிலிருந்து வேறுபட்ட சில ஆய்வுமுறைகளை நாட்டுப்புறவியல் ஆய்வு வரலாறு காட்டுகின்றது (Sankar, 2021). அவற்றில் சில 1. வரலாற்றுப் புவியியல் ஆய்வுமுறை, 2. வரலாற்று மீட்டுருவாக்க முறை, 3. குறிக்கோள் ஆய்வுமுறை, 4. செயல்திறன் ஆய்வுமுறை, 5. உளவியல் ஆய்வுமுறை, 6. அமைப்பியல் ஆய்வுமுறை, 7. வாய்மொழி வாய்பாட்டு ஆய்வுமுறை, 8. நாட்டுப்புறப் பண்பாட்டு ஆய்வுமுறை, 9. மக்கள் பண்பாட்டு ஆய்வுமுறை, 10. சூழ்நிலைக் கோட்பாட்டு ஆய்வுமுறை.

## வரலாற்றுப் புவியியல் ஆய்வுமுறை

ஒரு கதை உலகின் பலபகுதிகளில் பல்வேறு வகையாக வழங்கலாம். இக்கதை அந்தப் பகுதிகளில் தோன்றியது என்பதை விட ஒரு குறிப்பிட்ட இடத்தில் தோன்றிப் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியிருக்க வேண்டும் என்று கருதுவது பொருத்தமானது என்று பின்லாந்து நாட்டறிஞர்கள் கருதுகின்றனர். 'நாகரிகமிக்க நாடுகளிலிருந்து நாகரிகம் குறைவான நாடுகளுக்குக் கதைகளும், பிற செய்திகளும் பரவியிருக்க வேண்டும்' என்பது டார்சன் கருத்தாகும். இந்தியாவின் வடபகுதியில் தோன்றிய இராமயணக் கதைக்கரு இந்தியாவின் பலப்பகுதிகளுக்கும், தென்கிழக்கு ஆசியாவின் சிலப்பகுதிகளுக்கும் பரவியுள்ளது. வரலாற்றுப் புவியியல் முறையில் ஆராயும் போது கதையில் பலமாற்று வடிவங்களையும் புவியியல் அமைப்பின் படி எங்கெங்கு வழங்குகிறது எனக் கண்டுத் தொகுத்து, அட்டவணையிட்டு, மாற்றுவடிவங்களின் கூறுகளை ஆராய்ந்து பழமையான கூறுகள் அடங்கிய கதை எப்பகுதியில் வழங்கிவருகிறது என்பதைக் காணவேண்டும் என்று டார்சன் குறிப்பிட்டுள்ளார்.

சுருளிமலை பற்றிய கதைகள் மதுரை மாவட்டத்தில் பசுமலை எனும் பகுதியிலும் தேனி மாவட்டத்தில் உத்தம பாளையம் அருகில் உள்ள எரசை நாயக்கனூர் எனும் பகுதியிலும் வழங்கப்பட்டு வந்ததாகவும், சுரபி நதி வரலாறு குறித்த கதையானது பாண்டிய மண்டல வரலாறு என்னும் நூலில் மெக்கன்சியின் தொகுப்புகளில் காணப்படுகிறது. இதனை வரலாற்றுப் புவியியல் ஆய்வுமுறையில் ஆராயும் போது அதன் பழமையான கூறுகள் சுருளிமலையினைக் குறிப்பிடுகிறது.

## பழங்கதைமரபும் சுருளிமலையும்

பசுமலை வரலாறு (டி 3866) எனும் சுவடி எரசக்கநாயக்கனூர் எனும் பாளையப்பட்டைச் சேர்ந்தது என்று தாட்சுவடியில் குறிப்பிட்டுள்ளது. ஆனால் எரசக்கநாயக்கனூர் திண்டுக்கல்லைச் சேர்ந்த பாளையப்பட்டுகளுள் (தற்போது தேனி மாவட்டத்தில் உள்ள உத்தம பாளையம் அருகில்) ஒன்று. பசுவின் மடுவைப் போல இம்மலை உள்ளதால், பசுமலை என்று பெயர் ஏற்பட்டதாக சுவடி கூறுகிறது. ஆனால் பசுவுக்கும் மலைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று டபிள்யு. பிரான்சிஸ் எழுதியுள்ளார்.

இந்தச் சுவடி முழுவதும் ஒரு கதை கூறப்படுகிறது. ஒரு பசு, புலி ஒன்றுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற, தன் உயிரினைத் தியாகம் செய்கிறது. இந்த தியாகத்தை மெச்சியச் சிவன், புலி, பசு, கன்று ஆகிய மூன்றுக்கும் 'மோட்சம்' கொடுத்து பசுமாடு உருவில் ஒரு மலையை உருவாக்கியதாகக் கூறப்பட்டுள்ளது. இதே கதை, வேறு சில இலக்கியங்களிலும், புராணங்களிலும் காணக் கிடக்கிறது என்று மெக்கன்சியின் தொகுப்பு குறிப்பிடுகிறது.

சுரபி நதி வரலாறு குறித்த சுவடி (டி 3863) கூறும் சுரபி நதி என்பது சுருளி ஆறாகும். எனவே சுருளியாற்றுக்குச் சுரபி நதி என்றொரு பெயர் இருந்தமை இச்சுவடியால் புலனாகிறது. தற்போதைய தேனி மாவட்டத்தில் கம்பம், உத்தமபாளையம் முதலிய ஊர்களையொட்டிச் செல்லும் ஆறு சுருளியாறு. இந்தச் சுவடியில் வரலாறு தொடர்பான செய்தியும் உள்ளது என்று மெக்கன்சியின் தொகுப்பு குறிப்பிடுகிறது. சுருளிமலை பற்றிய குறிப்புகள் அரிகேசரி நல்லூர்த் தலபுராணத்தில் காணப்படுகிறது. இத்தலப்புராணத்தில் காமதேனு(பசு) பற்றிய குறிப்புகளும், சுரபி நதி பற்றிய குறிப்புகளும் காணப்படுகிறது. மேலும் கோரக்கர் மலைவாகடம், போகர் மலைவாகடம் போன்ற நூல்களில் சுருளிமலை பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது. மேற்கண்ட கதைகளை வரலாற்றுப் புவியியல் ஆய்வுமுறையில் ஆராயும் போது அதன் பழமையான கூறுகள் சுருளிமலையினையும், அங்கு காணப்படுகின்ற சுரபி நதியினையும் குறிப்பிடுகிறது என்பதை அறியலாம்.

## முடிவுரை

சுரபி என்பது காமதேனு (பசு) என்பதை அறிய முடிகிறது. பூதநாராயணச் சித்தர் வழிபாடானது வைணவ வழிபாடாக மாற்றமடைந்துள்ளது. பேராசிரியர் சி. கோவிந்தராசனார் குறிப்பிடும்

நெடுவேள்குன்றம் என்பது சுருளிமலை தான் என்பது ஏற்புடையது. மெக்கன்சியின் தொகுப்புகள் குறிப்பிடும் செய்திகளால் பசுமலை வரலாறு, சுரபி நதி வரலாறு போன்றவை சுருளிமலைக்குத் தொடர்புடையது.

## References


Abdur Rahim, V. (1997) Arikesavanallur Thala Puranam, Achiyanthirasalai, Theni, India

Balasubramaniyan, K.V. (2001) Aiviyal Nerikal, Uma Nool Veliyetakam, Thanjavur, India

Geetha, A., Manogarane R. (2022). Rituals and Beliefs of Kathavarayan Worship from an Anthropological Point of View. International Research Journal of Tamil, 4(SPL 1), 53-60. https://doi.org/10.34256/irjt22s18

Manikannan, R. (2020). Folktales of Tamil Nadu and the Grimm brothers' folktales - A comparison. International Research Journal of Tamil, 2(4), 43-54. https://doi.org/10.34256/irjt2046

Mohan, RC. (1994) Korrakar Malai Vagadam, Thamarai Noolagam, Chennai, India

Mohan, RC. (1999) Korrakar Malai Vagadam, Thamarai Noolagam, Chennai, India

Rajaram, D. (2019) Silappathikaram, Narmatha Pathippagam, Chennai, India

Sankar, M. (2021). Sangam Literary Short Poems - Ethnographic Perspective. International Research Journal of Tamil, 3(4), 140-155. https://doi.org/10.34256/irjt21418

Soundarapandian, P. (1997) Pandiya Mandala Varalarugal, Arasianr Kithisai Suvadikal Noolagam, Chennai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License